[1982 பிப்ரவரி 2

(4) தகவல் கோரல்

நீதிபதி பால் கமிஷன் அறிக்கை—விவாதம் கோரல்

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். நீதிபதி பால் கமிஷன் அறிக்கை டேபிளில் வைக்கப் பட்டிருக்கிறது. அரசாங்கத்தினுடைய அறிக்கையில், சட்டப் பேரவையில் பால் கமிஷன் அறிக்கை வைக்கப்பட்டால் அது குறித்து விவாதம் செய்வதற்கு முன் ஏற்பாடு செய்கின்ற முறை யில் தான் பால் கமிஷன் அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது என்று ஏற்கனவே சொல்லி இருக்கிறது. இந்தக் கமிஷனுடைய பல்வேறு இரக்கமன்டேஷன்களை, சிபாரிசுகளை அரசு ஏற்றுக் கொள்ள வில்லை. இது ஒரு முக்கியமான பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை. ஆகையினால் இதை விவாதத்திற்கு அனுமதிக்க வேண்டும். அதுமட்டுமல்ல. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் உமா நாத் அவர்கள் முருகேசன் கமிஷன் ரிப்போர்ட், அதாவது திருச்சி சிறையிலே 2 கைதிகள் இறந்து போனார்கள், அது சம்பந்தமாக இந்தக் கமிஷன் சம்பந்தமாக டேபிளில் வைக்கப் பட்ட அறிக்கையை விவாதம் செய்ய வேண்டும் என்று கேட்ட போது நீங்கள் அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். ஆகவே இதை விவாதிப்பதற்கு ஒரு நாள் 2 நாட்கள் அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்து அறிவிப்பு இப்போதுதான் கொடுத்திருக்கிறீர்கள். அதை அலுவல் ஆய்வுக் குழுவின் முன் வைத்து, தலைவர்களைக் கலந்து, அரசையும் கலந்து அது பற்றி முடிவெடுக்கப்படும்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். ஏற்கனவே வேறு கூட்டத் தொடரிலே கூட உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அதிகாரிகள் எதிர்கட்சித் தலைவரைப்பற்றி எந்த அளவு உணர்வோடு இருக் கிறார்கள் என்பதைப் பற்றிதான் சொல்லவருகிறேனே தவிர, எங்கள் தலைவருக்கு இந்தப்பட்டங்கள் எல்லாம் வேண்டாம். வேறு யாராவது போட்டுக் கொள்ளட்டும். ஆனால் அதிகாரிகள் பாரபட்சமாக நடந்து கொள்ளுகிறார்களே இது முறையா, சரியா என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15ஆம் நாளன்று கமிஷனர் கடிதம் ஒன்று ஸ்பீக்கர் அலுவலகத்தில் இருந்து எங்களுக்கு அனுப்பப் படுகிறது. அதிலே என்ன இருக்கிறது என்றால்,—I have the honour to inform you that Thiruvalur M. Karunanidhi.... என்று இருக்கிறது. ஏற்கனவே நீங்கள், இனிமேல் இதுபோன்று நடைபெறாது என்று உறுதி அளித்தீர்கள். ஆனால் மீண்டும் நடைபெற்றிருக்கிறது. இது முறையா என்று கேட்க விரும்பு கிறேன்.

1982 பிப்ரவரி 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நடவடிக்கை எடுக்கப் படும்.

(5) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்

திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"1982 ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள் 1 ஆம் தேதி யன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்களின் உவந்தளித்த பேருரைக்கு* தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்"

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. ஜே. சி. டி. பிரபாகரன் அவர்கள் முன்மொழிந்த ஆளுநர் உரைக்கு நன்றி நவிலும் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

*திரு ஜே. சி. டி. பிரபாகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில ஆளுநர் அவர்கள் அவைக்கு உவந்தளித்திருக்கின்ற உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகின்ற தீர்மானத்தை முன் மொழிய கிடைத்த இவ்வாய்ப்புக்கு நான் எனது நன்றியையும், பெரு மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள் கிறேன். உரையின் துவக்கமே, சென்ற ஆண்டு நான் உரை யாற்றியபோது, உலகத் தமிழ் மாநாட்டை நாம் கொண்டாடிய பெருமிதத்தோடு தொடங்கினோம், இந்த ஆண்டு துவங்கி உரை யாற்றுகிற போது தமிழுக்குச் சிறப்புச் சேர்த்திட்ட ஒரு பெரு மகனாருக்கு நூற்றாண்டு விழா எடுத்த பூரிப்போடு இருக்கிறோம் என்று கூறி இனிமையோடு உரையாற்றியிருப்பது சிறந்த மகிழ்ச் சிக்குரியதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது எதைக் காட்டுகிறது என்று சொன்னால், தமிழையும் நாம் மறக்கவில்லை, தமிழுக்குச் சிறப்புச் சேர்த்தவர்களையும் நாம் மறந்துவிடவில்லை என்பதை நாட்டோருக்கு உணர்த்திடும் விதத் தில் இந்த உரையின் துவக்கம் அமைந்து இருக்கிறது. ஆனால், சில பேருக்கு இருக்கின்ற வயிற்றெரிச்சல் எல்லாம் இந்த பாரதிக்கு இப்படியெல்லாம் சிறப்பு சேர்க்கிறார்களே என்று இருக்கிறது. ஆகவே, பாரதிக்குக்கூட சாதிச் சாயம் பூசிப் பார்க்கும் நிலைமை கள் தமிழகத்தில் ஏற்பட்டு இருப்பதைப் பார்த்து, உள்ளபடியே,

*131–142 ஆம் பக்கங்களில் ஆளுநர் உரை இணைப்பு II-ஆக அச்சிடப்பெற்றுள்ளது. அதன் தமிழாக்கம் 142–156 ம் பக்கங் களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.